**வேலைவாய்ப்பு அறிவிப்பு**

**மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் – கடலூர் மாவட்டம்**

**தொழில்நுட்ப உதவியாளர் – 1 பணியிடம்**

**ஒப்பந்த அடிப்படையில்**

**தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை** சார்பில் வெளியிடப்பட்ட **G.O.(2D) No.144, dated** 16.09.2026–ன் அடிப்படையில், கடலூர் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தின் கீழ் **தொழில்நுட்ப உதவியாளர் – 1 பணியிடம்** ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அரசாணையின்படி, தொழில்நுட்ப உதவியாளர் பணிக்கு **மாதம் ரூ.22,000/– ஊதியம்** மற்றும் 19 **மாதங்களுக்கான பணிக்காலம்** ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பணியுடன் தொடர்புடைய அலுவல் பயணங்களுக்காக Travel Head வழங்கப்பட்டுள்ளது.

பணியிட விவரங்கள்

- பதவி: தொழில்நுட்ப உதவியாளர் – 1
- பணி தன்மை: ஒப்பந்த அடிப்படையில்
- மாத ஊதியம்: ரூ.22,000/–
- பணிக்காலம்: 19 மாதங்கள்
- பணியிடம்: கடலூர் மாவட்ட ஆட்சியரகம் மற்றும் மாவட்ட வன அலுவலகம், கடலூர்
- அலுவல் பயணம்: சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற இயக்கப் பணிகள் தொடர்பான பயணம், அரசு விதிமுறைகளின்படி.

கல்வித் தகுதி

கீழ்க்கண்ட துறைகளில் ஏதேனும் ஒன்றில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்:

- உயிரியல் அறிவியல்
- சுற்றுச்சூழல் அறிவியல்
- சூழலியல்
- வனவியல்
- வனவிலங்கு அறிவியல்
- பொது கொள்கை
- தொடர்புடைய / இணையான துறைகள்

- M.A. English கல்வித் தகுதி பெற்றவர்களும் தகுதி அனுமதிக்கு உட்பட்டு விண்ணப்பிக்கலாம்

மேலும், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அடிப்படை தட்டச்சுத் திறன் பெற்றிருக்க வேண்டும்.

**அனுபவம் மற்றும் திறன்கள்**

- குறைந்தபட்சம் 1 ஆண்டு தொடர்புடைய பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- குறிப்பாக அரசுத் துறை / அரசு அலுவலகத்தில் 1 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- Data Entry / Data Management அனுபவம்.
- அரசு அலுவலக கோப்பு பராமரிப்பு, பதிவேடு பராமரிப்பு மற்றும் ஆவணப்படுத்துதல் அனுபவம்.
- MS Word, MS Excel, MS PowerPoint ஆகியவற்றில் நல்ல திறன்.
- அரசு அறிக்கைகள், கடிதங்கள், புள்ளிவிவரங்கள் மற்றும் PowerPoint Presentations தயாரிக்கும் திறன்.
- தரவு தொகுத்தல் மற்றும் அலுவலக ஆவணப் பணிகளில் அனுபவம்.
- நல்ல தகவல் தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்புத் திறன்.

வயது மற்றும் குடியிருப்பு தகுதி

- விண்ணப்பதாரர் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவராக / குடியிருப்பாளராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் போது 40 வயதைத் தாண்டியிருக்கக் கூடாது.

முக்கிய பணிப் பொறுப்புகள்

தொழில்நுட்ப உதவியாளர்:

1. மாவட்ட காலநிலை மாற்ற இயக்கப் பணிகளை ஒருங்கிணைத்தல்.
2. அரசு துறைகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
3. காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை கண்காணித்தல்.
4. காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் தரவுகளை சேகரித்து தொகுத்தல்.
5. அறிக்கைகள், அலுவல் கடிதங்கள், புள்ளிவிவரங்கள் மற்றும் PowerPoint presentations தயாரித்தல்.
6. அரசு கோப்புகள் மற்றும் பதிவுகளை பராமரித்தல்.
7. கூட்டங்கள், பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல்.

8. களப்பணிகள் மற்றும் துறை சார்ந்த அலுவல் பயணங்களை மேற்கொள்ளுதல்.
9. காலநிலை மாற்றம் தொடர்பான சிறந்த நடைமுறைகளை ஆவணப்படுத்துதல்.
10. மாவட்ட காலநிலை அலுவலர் / இயக்குநரால் வழங்கப்படும் பிற பணிகளை மேற்கொள்ளுதல்.

DCCM வழிகாட்டுதலில் Technical Assistant–ன் முக்கிய பொறுப்புகளாக துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு, திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள், ஆவணப்படுத்துதல் மற்றும் DCCM செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்வு முறை

- விண்ணப்பங்களின் தகுதி பரிசீலனை
- நேர்முகத் தேர்வு
- தட்டச்சுத் தேர்வு
- தேவைக்கேற்ப 2–3 பேர் கொண்ட காத்திருப்புப் பட்டியல் பராமரிக்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் தங்களது Updated Resume / CV, கல்வித் தகுதி மற்றும் பணி அனுபவ விவரங்களுடன் கீழ்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்:

📧 cmgfp.cud@gmail.com

மின்னஞ்சல் Subject:
Application for Technical Assistant – District Climate Change Mission, Cuddalore

நேரடியாகவும் கடலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

**📅 விண்ணப்பிக்க கடைசி நாள்**

**30.09.2026**

**மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம்**
**மாவட்ட ஆட்சியரகம், கடலூர் – 607001**
**மாவட்ட வன அலுவலகம், கடலூர்**

**மாவட்ட ஆட்சியர் / இயக்குநர்**
**மாவட்ட வன அலுவலர் / மாவட்ட காலநிலை அலுவலர் & உறுப்பினர் செயலர்**
**மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம், கடலூர்**